**செய்தி வெளியீடு எண் : 418** **நாள் : 01.03.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் சென்னை புதுக்கல்லூரியில் , நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகளை (2023) இன்று தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இன்று (01.03.2023) தமிழ்நாடு அரசு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில், சென்னை புதுக்கல்லூரியில், நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகளை (2023) தொடங்கி வைத்தார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடிய போது பேசியதாவது :–**

மாணவர்கள் படிக்கின்ற காலத்தில் கல்வியுடன் நம் திராவிட வரலாறு, சிறுபான்மையினருக்கு திராவிடம் என்ன செய்திருக்கின்றது என்ற எல்லா வரலாறுகளையும் அறிந்து கொள்ள வேண்டும். வருங்கால இளைஞர்களும் திராவிட வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

முதல்வர் பிறந்தநாளன்று இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருவது மகிழ்ச்சி. கடந்த முறை 20,000 மாணவர்கள் இந்த போட்டியில் பங்கு பெற்றுள்ளனர். திமுக பேசியே வளர்ந்த இயக்கம். பேச்சுப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் கலந்து கொள்வதே மிகப்பெரிய வெற்றி தான். மாணவர்கள் இந்த பேச்சு போட்டியில் பங்கு பெறும் பொழுது, தமிழ் இனத்தின் பாரம்பரியம் மற்றும் வரலாற்றை தெரிந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள், மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள், திரு. தயாநிதி மாறன் எம்.பி. அவர்கள், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், துணைத்தலைவர் திரு. இறையன்பன் குத்தூஸ் அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in